1990 மே 3]

ஆழ்துளைக் கருவியில் பணிபுரிகின்ற ஊழியர்கள்.

*6476. திருமதி பாப்பா உமாநாத் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

அ) ஆழ்துளைக் கருவியில் பணிபுரிகின்ற ஊழியர்களுக்கு துளையிடும் சமயம் அதிலிருந்து வெளிப்படும் தூசுகள், கம்ப்ரசர் வெப்பம் மற்றும் டீசல், ஆயில், இரும்பு சாமான்களின் தாக்கம் ஆகியவற்றால் மூச்சுக்குழாய் பாதிக்கப்பட்டு பல்வேறு நோய்களுக்கு ஆளாவது அரசுக்குத் தெரியுமா ?

ஆ) ஆம் எனில், இவர்களை காக்க அரசின் திட்டம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி ; பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் மூச்சுக்குழாய் பாதிக்கப்பட்டதாக இதுவரையில் தகவல் ஏதும் பெறப்படவில்லை. இருப்பினும் இவர்கள் தக்க பாதுகாப்புகளுடன்தான் பணியில் ஈடுபடுகிறார்கள்.

திருமதி பாப்பா உமாநாத் : பேரவைத் தலைவர் அவர்களே, மூச்சுக்குழாய் பாதிக்கப்படக்கூடிய அளவிற்கு பல நோய்கள் வந்திருப்பதாகத்தான் சொல்கிறார்கள். எப்படியும் அது போன்ற ஒரு பணியிலே ஈடுபடக்கூடிய அந்த ஊழியர்கள் இப்படி பல்வேறு சுற்றுப்புறச் சூழல் சரியாக இல்லாத காரணத்தால் பாதிக்கப்படுகிறார்கள் என்று அமைச்சர் அறிவாரா ? அவர்களுக்கு அன்றாடம் எவ்வளவு படி கொடுக்கப்படுகிறது. அவர்கள் நிரந்தரமானவர்களா அல்லது அன்றாடம் வைக்கப்படுபவர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் ஆழ்துளை கிணறுகள் அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள் அவ்வாறு ஆழ்துளை

கிணறுகள் அமைக்கும்போது நீர் மட்டம் கிடைக்கும் வரை ஆழ்துளைக் கிணறுகளிலிருந்து வெளிப்படும் கற்கள், ஆழ்துளை கிணற்றுக்குள் தண்ணீர் மற்றும் நுரை போன்றவற்றைச் செலுத்தி கட்டுப்படுத்தப்படுகிறது. கம்ப்ரசர் இயந்திரத்திலிருந்து வெளிப்படும் எண்ணெ போன்றவற்றினால் ஊழியர்கள் வழுக்கி விழுந்துவிடாமல் இருக்க ஊழியர்களுக்கு காலணியும், பற்ற வைத்தல் மற்றும் சாணை பிடித்தல் போன்ற வேலைகளில் ஊழியர்கள் ஈடுபடும்போது ஊழியர்களின் கண்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு பாதுகாப்புக் கண்ணாடியும் வழங்கப்படுகிறது. மற்றப்படி ஏற்படும் விபத்துக்களிலிருந்து காப்பாற்றுவதற்கு தலைக்கவசம், கையுறை மற்றும் சீருடை எல்லா ஊழியர்களுக்கும் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆழ்துளைக் கிணறுகளை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் மூச்சுக் குழாய் பாதிக்கப்பட்டதாக இதுவரையில். எந்தக் குற்ற தகவலும் இல்லை. இதுபோன்று பாதிக்கப்படுவதாக குறிப்பை அவர் கொடுப்பார் என்று சொன்னால் அது குறித்து அரசு நடடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துகொள்கிறேன்.

திருமதி பாப்பா உமாநாத் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற ஊழியர்கள் இந்த நோயிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள தனியாக மருத்துவப்படி ஏதும் அளிப்பதற்கு அரசு முன்வருமா? அந்த ஊழியர்களை நிரந்தரம் ஆக்கி பணியிலே அமர்த்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வாரியத்தினுடைய விதிமுறைகளுக்கு உட்பட்டு அவர்களை நிரந்தரப்படுத்துவது போன்றவைகளை எல்லாம் செய்து வருகிறார்கள்.

கன்னியாகுமரியில் அரசு பொது மருத்துவமனை.

*6500. திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரியில் தற்போது ஆரம்ப சுகாதார நிலையமாக இயங்கும் மருத்துவ மனையை மீண்டும் அரசு பொது மருத்துவமனையாக மாற்றி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?